**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்</u>**

O.S.No.43/2021

பிரதிவாதி தரப்பு சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 25.02.2026ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>பி.வா.சா.1– துரைசாமி த/பெ சுப்புஉடையார்</u>**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. 21.09.2010ம் தேதி முருகனுக்கு நாங்கள் கிரையம் கொடுத்த தேதியில் நானும் எனது சகோதரர் சுப்பிரமணியும், அவரது வாரிசுகளும் மதியழகன் என்பவருக்கு 1 ஏக்கர் 20 செண்ட் சர்வே எண். 33ல் கிரையம் கொடுத்தோம் என்றால் சரிதான் சர்வே எண். 33/1ல் கொடுத்தோம். மேற்படி இடம் நான்கெல்லை தங்கள் கிரைய நிலத்திற்கு கிழக்கு, வயலூர் கிராம எல்லைக்கு தெற்கு, சர்வே எண். 33ல் எங்கள் இரண்டு இலக்கமிட்ட துரைசாமி பாக நிலத்திற்கு மேற்கு, சர்வே எண். 33ல் கிணற்றிலிருந்து நேர் மேற்காக 12 அடி அகல அமைக்கப்பட்டுள்ள கிழமேல் பொதுப்பாதைக்கு வடக்கு என்றால் சரிதான்.

2. முருகனுக்கு கிரையம் கொடுத்த தெற்கேவும், மதியழகன் கிரையம் கொடுத்த நிலம் வடபுறமும் உள்ளது இரண்டும் நடுவில் 12 அடி கிழமேல் பாதை உள்ளது. முருகன் நிலத்திற்கு நேர் வடக்கு மதியழகனுக்கும், அதற்கு கிழக்கே எனக்கு உள்ளது. முருகனுக்கு கிரையம் கொடுத்த நிலத்திற்கு கிழக்கே என்னுடைய நிலம் உள்ளது. என்னிடம் காட்டப்படும் 21.09.2010 தேதியிட்டகிரையப்பத்திரம் மதியழகனுக்கு எழுதிக்கொடுத்த பத்திரம் என்றால் சரிதான். (**21.09.2010 தேதியிட்டகிரையப்பத்திரம் இணையவழி பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** )

3. மதியழகன் என்பவர் எங்கு குடியிருக்கிறார் என்றால் காக்காயாம்பட்டியில் குடியிருந்து வருகிறார் எனது மனைவியின் சகோதரர் ஆவார். சர்வே எண். 33/1, 33/2 தெற்கே சர்வே எண். 34/2 நிலம் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 34/2 தெற்கே வாரி உள்ளது. வாரிக்கும் தெற்கும் சர்வே எண். 53 நிலம் உள்ளது. சர்வே எண். 53நிலத்திற்கும் தெற்கே கிழமேல் ரோடு உள்ளது. காக்காயம்பட்டியிலிருநது கிழமேல் ரோட்டிலிருந்து வாரி வழியாக வந்து சர்வே எண். 33ல் கிழமேல் 12 அடி பாதை வழியாகத்தான் மதியழகன் கிரையம் பெற்ற

இடத்திற்கு வந்து சென்று கொண்டிருக்கிறார் என்றால் சரிதான் ஆனால் தற்போது பாதை இல்லை.

4. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 பத்திரப்படி முருகன் என்பவர் பாப்பா என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.2 பத்திரத்தில் சர்வே எண்.33/2 பொது கிணற்றடி ஜாகா வரை அமைக்கப்பட்டுள்ள 12 அடி அகல கிழமேல் பாதைவழியாக வண்டி வாகனங்கள் ஓட்டிச்சென்றவர, நடந்து சென்று வர உள்ள வண்டி பாதை பாத்தியம் குறிப்பிட்ப்பட்டுள்ளது என்றால் பத்திரத்தில் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

5. பாப்பா கிரையம் வாங்கிய பிறகு மறுபடியும் மதியழகனுக்கு அதே இடத்தை 18.06.2014 ல் கிரையம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அதே போன்று மதியழகன் கிரையம் பெற்ற பத்திரத்திலும் பாதை பாத்தியம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 33/1 ல் 23 1/2 செண்ட் என்னுடைய நிலத்தில் சேர்ந்துள்ளதாக சர்வேயர் அளந்து காண்பித்தார் என்றால் சரிதான். வழக்கறிஞர் ஆணையர் என்னுடைய நிலம் வரை 12 அடி பாதை உள்ளதாக காண்பித்துள்ளார் என்றால் சரிதான்.

6. தற்போது நான் பாதை இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் தற்போது வரை பாதை உள்ளது என்றாலும் 2015 வரை பாதை பயன்படுத்தி வந்தார்ள ன்றாலும் 2015 ம் ஆண்டு நாங்கள் பாதையை அழித்துவிட்டு நிலத்தை ஆக்கிரமித்துவிட்டோம் என்றால் சரியல்ல. வாதியிடம் உள்ள 90 செண்ட் நிலத்தில் சோளம், துவரை பயிரிட்டு வருகிறார் என்றால் இல்லை. சர்வே எண். 33/1, 33/2 ல் உள்ள 5 ஏக்கர் 90 செண்ட் நிலத்தில் வாதி கிரையம் பெற்ற 1 ஏக்கர் 13 1/2 செண்ட் போக மீதம் உள்ள நிலம் எல்லாம் எங்கள் குடும்பத்தாரிடம் பாத்தியப்பட்டு உள்ளது என்றால் சரிதான் என்னிடமும, மதியழகனிடமும் உள்ளது.

7. 2015 பாதை அழித்துவிட்டதால் வாதியிடம் உள்ள 1 ஏக்கர் 13 1/2 செண்ட் டை கைப்பற்றிவிடலாம் என்று பாதை அழித்துவிட்டோம் என்றால் சரியல்ல. பாதை அழித்தது சம்பந்தமாக வாதி 2015 ல் போலிசில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான் கோர்ட்டில் பார்த்துக்கொள்ளுமாறு சொல்லிவிட்டார்கள். வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல அளந்து எடுத்துக்கொள்ளலாம்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.02.26 13:18:46 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.